மலேசியாவில் பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு கல்வி நிதியை முதலமைச்சர் வழங்க முடியாது என்றால்

# தி.மு.க.வும், தமிழ்நாட்டு மக்களும் மாணவருக்கான கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




சென்னை, செப்.19-

மலேசிய தேசிய பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி படிப்பு மாணவர் பாரதிதாசனுக்குத் தேவைப்படும் நிதியை வழங்க முடியாது என்றால் அதனை முதலமைச்சர் வெளிப்படையாக அறிவித்து விடவும். தி.மு.க.வும், தமிழ்நாட்டு மக்களும் அந்த மாணவருக்கான கல்விக் கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் (17-09-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**"எதைப் பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள். உங்களுக்கு என்ன தேவையென்றாலும் நமது அரசு நிறைவேற்றித் தரும்" என்ற நம்பிக்கையை முதலமைச்சராக ஒவ்வொரு மேடையிலும் விதைத்தவன் என்ற வகையில், இந்தத் தம்பியின் கண்ணீர் நெஞ்சைக் கனக்கச் செய்கிறது.**

**அவர் கேட்பது உதவியல்ல, அரசு சார்பில் அவருக்கு உறுதியளிக்கப்பட்ட உரிமையைத்தான் கோருகிறார். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தாலேயே ஒரு மாணவரின் பல ஆண்டு உயர்கல்விக் கனவு பாழாகக் கூடாது.**

**ரோகித் வெமுலாவுக்கு நடந்தது போல எனக்கும் நடக்கிறது என்கிறார். எங்களுக்கு எதிர்க்கட்சியாகவே இருந்தாலும் அப்படி ஒரு அவப்பெயரைத் த.வெ.க. அரசு சுமக்க வேண்டாம் என்பதே என் வேண்டுகோள்.**

**மாணவர் பாரதிதாசனுக்குத் தேவைப்படும் நிதியை வழங்க முடியாது என்றால் அதனை முதலமைச்சர் வெளிப்படையாக அறிவித்துவிடவும். தி.மு.க.வும் தமிழ்நாட்டு மக்களும் அந்த மாணவருக்கான கல்விக் கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம்!"**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## திருமதி. துர்கா ஸ்டாலின் சகோதரி ஜெயந்தியின் மாமனார்:

## திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் மருமகன்,

# டி.என்.ஆர்.வனஜாவின் கணவர் ஜி. சுப்பிரமணியம் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 19-

**திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் மருமகனும், டி.என்.ஆர். வனஜா அவர்களது கணவருமான திரு.ஜி.சுப்பிரமணியம் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:**



திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் அவர்களது மருமகனும், டி.என்.ஆர்.வனஜா அவர்களது கணவருமான ஜி.சுப்பிரமணியம் அவர்கள் மறைவெய்திய துயர் மிகு செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

எனது மனைவி திருமதி.துர்கா அவர்களின் சகோதரி திருமதி. ஜெயந்தி அவர்களின் மாமனாரான அவர், பாசத்திற்கு இலக்கணமாய் விளங்கி, அன்பும் பண்பும் நிறைந்தவராக அனைவரது நன்மதிப்பையும் பெற்றவர். அண்ணா பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் வாடும் திருமதி ஜெயந்தி - சரவணன் இணையருக்கும், அவர்தம் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.




பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் வாழப்பாடியில் உள்ள தளபதி மு. க. ஸ்டாலின் அறிவாலயம் முன்பு தந்தை பெரியார் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம். பி., தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் சமூக நீதி நாள் உறுதி மொழி அனைவரும் எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, பேரூர் செயலாளர் செல்வம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் சீனிவாசன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான தி.மு.கழக சட்டத்துறை WAR ROOM ஐ திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க.செல்வராஜ் வரவேற்புரையில் முன்னாள் அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், கழக சட்டத்துறை இணை செயலாளர் கே.எம்.தண்டபாணி முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் வழக்கறிஞர்கள் ஈரோடு அருள்செல்வம், ராதாகிருஷ்ணன், திருப்பூர் விவேகானந்தன், பத்மநாபன் உள்பட கழக வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை கோட்டைவாசல்படியில் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்த நாளை முன்னிட்டு அவர்களின் சிலைக்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. ராஜேந்திரன், திராவிட கழகத்தைச் சேர்ந்த புபேஷ்குப்தா, நெப்போலியன், செந்தில்குமார், மு.க.ஜீவா, மாவட்ட இலக்கிய அணி தலைவர் இரா. தங்கதுரை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கலையரசன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.ஏ. கணேசன், நாகை நகர கழக துணை செயலாளர் வெற்றிலைக் கடை எஸ்.சிவா, நாகை நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்யன் மற்றும் சோமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்



தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 148 ஆவது பிறந்தநாளையொட்டி பாப்பிரெட்டிப்பட்டியில் உள்ள அவரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.உடன் ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார்,பி.எஸ்.சரவணன்,மற்றும் ஆர்.சித்தார்த்தன்,ஜெயச்சந்திரன்,மாரி உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றுகொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக தமிழ்நாட்டின் திராவிடப் பேரொளி நம் தாய்நிலத்திற்கு "தமிழ்நாடு எனப் பெயர் சூட்டி வரலாற்றில் அழியாப் புகழ்பெற்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாளை முன்னிட்டு ஓசூர் தாலுகா அலுவலகம் செல்லும் சாலையில் உள்ள பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் மாவட்ட அவை தலைவர் யுவராஜ், மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, தொ.மு.ச. கோபாலகிருஷ்ணன் மற்றும் பகுதி செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் .



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயிலில் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்த நாளை முன்னிட்டு செம்பனார்கோயிலில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.உடன் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எம். அன்பழகன், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.கபிலன், மாவட்ட பிரதிநிதிகள் தென்னரசன் பிரபாகர் சடகோபன், சங்கர், ஒன்றிய பொருளாளர் சரவணன், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.